பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# தொழுகையடவு ஷாபி

இஃது

காயற்பட்டணம்

அஹ்மது நயினா லெப்பையவர்கள் குமாரர்

ஸதக்கதுல்லா அவர்களால்

முன்னர் அச்சிற்பதிப்பித்த பிரதிக்கிணங்க,

மேலப்பாளையம்

காளை ஹஸனலிப்புலவர் அவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால் தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

1946. [அணா. 3.

Q7:4146
N46

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# தொழுகையடைவு ஷாபீ

இஃது

காயற்பட்டணம்

அஹ்மது நயினா லெப்பையவர்கள் குமாரர்

ஸதக்கதுல்லா அவர்களால்

முன்னர் அச்சிற்பதிப்பித்த பிரதிக்கிணங்க,

மேலப்பாளையம்

காளை ஹஸனலிப்புலவர் அவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

8-JUL 194

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால் தங்களது

...ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

இதன் விலை] 1946. [அணா. 3.

G7:4146
N46

113726

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

சுத்தப் பதிப்பு.

# தொழுகையடவு ஷாபீ.

## அவ்வல் கலிமா தையிபு.

லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி.

## இரண்டாங் கலிமா ஷஹாதத்து.

அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக லஹு வஅஷ்ஹது அன்னமுஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு.

## மூன்றாங் கலிமா தம்ஜீது.

ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து லில்லாஹி வலாஇலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர் வலாஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹில் அலிய்யில் அலீம்.

## நாலாங் கலிமா தௌஹீது.

லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீது பியதிஹில் கைறு வஹுவ அலாகுல்லி ஷையின் கதீறு.

## ஐந்தாங் கலிமா றத்துல் குபிர்.

அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மின் அன் உஷ்ரிக பிக ஷைஅன் வஅனா அஃலமு பிஹி வஅஸ்தக்பிருக லிமாலா அஃலமு இன்னக அந்த அல்லாமுல் குயூப் துப்து அன்ஹு வதபர்ரஃது அன்குல்லி தீனில் ஸிவாதீனில் இஸ்லாமி வஆமன்து வஅஸ்லம்து வஅகூலு லாயிலாஹஇல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி.

## இஸ்லாத்தின்னியல்பு.

புனியல் இஸ்லாமு அலா கம்ஸின் ஷஹாததது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஅன்ன முஹம்மதுர் றஸூலுல்லாஹி வயிகா முஸ்ஸலாதி வயீதாவுஸ் ஸகாதி வஸவ்மு றமலான வஹஜ்ஜில் பைதி மனிஸ்ததாஅ இலைஹி ஸபீலா.

## இதன் பொருள்.

இஸ்லாம் மார்க்கம் ஐந்து காரியங்கொண்டெடுக்கப்பட்டது. அதில் 1-வது கலிமா ஷஹாதத்து. அதாவது:—நான் சாட்சி சொல்லுகிறேன். அல்லாவையல்லாமல் வேறே நாயனில்லை யென்றும், முஹம்மதாகிறவர்கள் அல்லாவுடைய றஸூலென்றும் உண்மையென உள்ளத்தில் கருதி, வாயினால் கலிமாவைப் பக்குவ வயதின் பின்னர் ஒரு விடுத்தமேனும் மொழிய வேண்டுமென்பது.

(வயிகாமுஸ் ஸலாதி) 2-வது தொழுகை. அதாவது கலிமாவை மொழிந்து இஸ்லாமில் புகுந்த ஒருவன் மற்ற நான்கு வினைகளுமவனே எடுத்துச் செய்வதற்கு உரித்தென்று வேத விதிப்படியே அந்நான்கின் முதற்பாலாகிய தவத்தியல் எனுந் தொழுகையை இரவாலும் பகலாலும் நாளொன்றுக்கும் ஐந்து வக்து பதினேழு றக்அத்து எக்காலமுந் தொழுதுகொள்ள வேண்டுமென்றது.

(வஈதாவுஸ் ஸகாதி) 3-வது ஸகாத்து. அதாவது இஸ்லாத்துக்குரிய வொருவன் தன்னிடத்தில் பொன், வெள்ளி, ஒட்டகம், மாடு, ஆடு, தானியங்கள், திருகைனி, ஈத்தங்கனி ஆக இவ்வெட்டுமுண்டாயிருக்குமேயானால் ஸகாத்துக் கொடுக்கவேண்டுமென்று வேதவிதியாயிற்று என்றமையால், பொன்னிருபது களஞ்சி யிருந்தால் அரை களஞ்சியும், வெள்ளி இருநூறு திருக மிருந்தால் ஐந்து திருகமும், ஒட்டகை ஐந்திருந்தால் ஒரு வயதுப்பருவத்துடைய ஒரு செம்பரி குட்டியும், 30-மாடு இருந்தால் ஒருவயதுள்ள ஒரு காளை கன்றும், 40-ஆடுயிருந்தால் ஒரு வயதுள்ள செம்மறி குட்டியும், தானியங்கள், திருகைகனி, ஈத்தங்கனி ஐந்துகோட்டையிருந்தால் அரைக்கோட்டையும் ஆக இவ்விதமாக வருஷத்திற்கொருமுறை ஸகாத்துக்கொடுத்து விடவேண்டுமென்றது. இத்தொகைக்கு குறைந்திடில் கொடுத்திட வாஜிபாகாதென்று கொள்க,

(வஸவ்மு றமலான்) 4-வது நோன்பு. அதாவது இஸ்லாமியல்பையுடையான் வருடந்தோறும் வரும் றமலான் மாதம் நோன்பு நோற்கவேண்டுமென வேத விதியாயிற்று. ஆகையால் நோயாளியும், சக்தியில்லாதவனும், யாத்திரை போவானும் அந்த நோன்பை நோற்க, பர்ளுக்குரிய நாளன்றித் தனக்கு நோயற்று சக்தியுடன் அவதி நீங்கிய பின், ஒப்பிய கடனைப்போல் அந் நோன்பை கலாச் செய்யவேண்டுமென்பது.

(வஹஜ்ஜில் பைதி மனிஸ்ததாஅ இலைஹி ஸபீலா) 5-வது ஹஜ்ஜு. அதாவது இஸ்லாம் மார்க்கம் புகுந்த ஒரு முஸ்லிமானவன் தனக்குரிய தகுதியாகிய முதலும், சரீர பலனும், ஏறிப்போக வாகனமுமுண்டாய் வழியிற் பயமில்லாமையாயிருக்குமாயின் வேத விதிப்படியே ஒரு விடுத்தமேனும் மக்கத்திற்போய் ஹஜ்ஜு செய்து முடித்திடவேண்டுமென்பது. இவ்வைந்து கடமைகளும் ஆண் பெண் இருவர்கள் பேரிலும் பர்லா யிருக்கும்.

இப்பர்ளுகளன்றி இதனோடொத்துச் செய்யும் நல்வினைகளெல்லாம் சுன்னத்தென்றாயிற்று. ஆகையால் ஆண்களும் பெண்களும் முதலாவதாகிய கலிமாவைமனதில் மாத்திரம் நினைத்துக் கொண்டு வாயினால் மொழியவில்லையேயானால் அவர் இஸ்லாத்துக் குரியவரல்லர். ஆகையால் மற்ற பர்லாகிய நான்கு வினைகள் செய்திடினும் பலித்திடாதென்பதாம்.

## ஈமான் நிலை.

ஆமன் துபில்லாஹி வமலாயிகதிஹி வகுதுபிஹி வருஸுலிஹி வல் யவ்மில் ஆகிரி வல்கத்ரி கைரிஹி வஷர்ரிஹி மினல்லாஹி தஆலா.

## இதன் பொருள்.

ஈமான் ஆறு காரியங்களைக்கொண்டு நிலைப்பட்டது.

அதில் 1-வது (ஆமன்து பில்லாஹி) அல்லாஹுத் தஆலா ஒருவன் உண்டென்றும் அவன் இணையில்லாதவனென்றும் எப்பொழுதும் உள்ளவனென்றும் சாதாரண பார்வைக்கு ஒன்று போல் தோன்றும் வஸ்தானது, ஒன்றிலிருந்து ஒன்றுண்டாய் இணையுந்துணையுமாய்ப் பிறப்பு மிறப்புமாய் உண்டானதிலிருந்

ஒவ்வொன்று யாயிற்றே அவ்வாறின்றி எல்லா வஸ்துவினும் பரவித்தோன்றிடாப் பொருளாய் நின்ற அல்லாஹுத் தஆலா ஒருவனே உண்டென்று நினைத்து நிர்ணயம் பற்றி இருதயத்தில் ஈமான் கொள்ளுகிறது.

2-வது (வமலாயிகதிஹி) மலக்குகள் உண்டென்பது. அதாவது, மலக்குகள் அல்லாஹுத் தஆலாவுடைய படைப்புகளுமாய், அவன் அடியார்களுமாய், அவன் ஏவல் பணிவிடை செய்கிறவர்களுமாய், ஆண் பெண் அல்லாதவர்களுமாய், ஊணுறக்க மில்லாதவர்களுமாய் உண்டென்றறிந்து ஈமான் கொள்கிறது.

3-வது (வகுத்பிஹி) ஸுஹுபுகளும் வேதங்களுமிறங்கினதுண்டென்றது. அதாவது அல்லாஹுத் தஆலா தன்னுடைய ஸிபத்தை வெளிப்படுத்துகிறதற்கு நபிமார்களை உண்டாக்கி அவர்களுக்கு வஹிகொண்டு இறக்குவித்த அவனது திருவசனமாகிய (100) ஸுஹுபும், நாலு வேதமும் என்றதில் ஆதம் நபிக்கு ஸுஹுபு 10-ம், ஷீது நபிக்கு ஸுஹுபு 50-ம், இத்ரீஸ் நபிக்கு ஸுஹுபு 30-ம், இபுறுஹீம் நபிக்கு ஸுஹுபு 10-ம், மூஸா நபிக்கு தௌறுத்து வேதமும், தாவூது நபிக்கு ஸபூறு வேதமும், ஈஸா நபிக்கு இஞ்சீல் வேதமும், முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு புறுகான் வேதமும் கொடுக்கப்பட்டதென்றறிந்து ஈமான் கொள்ளுகிறது.

4 வது (வருஸுலிஹி) றஸூல்மார்களுண்டென்றது. அதாவது அல்லாஹுத் தஆலா அவன் தன்னையறிந்து வணங்குகிறதற்கு வேண்டி இப்புவியினிடத்தில் பிறப்பித்த இலக்ஷத்திருபத்து நாலாயிரம் நபிமார்களில் தாங்கள் வணங்குகிறதுமன்றி உம்மத்துகளையும் வணக்கச்சொல்லி நாயன் ஏவலால் ஏவிக்கொள்ளும் பொருட்டு நபிபட்டமும் றஸூல் பட்டமும் கிடைத்த முந்நூற்றுப்பதிமூன்று முறுஸல்கள் என்றும், இனி உம்மத்துகளை நாயன் ஏவலின்றி ஏவாமல் தாங்களே வணக்கஞ் செய்து நபிப்பட்டம் மாத்திரம் பெற்ற நபிமார்களென்றும் அறிந்து ஈமான் கொள்ளுகிறது.

5-வது (வல்யவ்மில் ஆகிரி) கியாமதென்னுமோர் முடிவு நாளுண்டு என்றது. அதாவது படைக்கப்பட்ட வஸ்துகளனைத்தும் இறந்து ஒழிந்து பனுவாகிய பின்னர் மடிந்தவர்களெல்லோர்களை அந்நாளையில் அல்லாஹுத் தஆலா எழுப்பி அணியணியாய்

நிறுத்திக் கேள்விக்கணக்குகேட்டு நன்மை செய்த அடியார்களை சொர்க்கத்திலும், தீமைசெய்த அடியார்களை நரகத்திலும் விடப் பட்ட அந்நாளுண்டென்று உறுதித்து ஈமான் கொள்ளுகிறது.

6-வது (வல்கத்ரி கைரிஹி வஷர்ரிஹி மினல்லாஹி தஆலா) நன்மை தீமையென்னும் இருவகைக் கற்பனைகளுண்டென்றது. அதாவது ஆலத்தில் நடக்குஞ் செயல்கள் நன்மை, தீமை, ஈமான், குபிர், பணிவிடை, பாவம் இதைத் தவிர உள்ளவைகள் அடங் கலும், அல்லாவுடைய கற்பனையைக்கொண்டும், கலாக்கொண்டும் அவன் நாட்டங்கொண்டு மாயிருக்கும். ஆகிலும் அடியாருக்கு அதில் இக்தியாறுண்டு. ஆனபோதே அல்லாஹுத் தஆலா அடி யானுடைய செயலைப்படைக்கிறவன், அடியான் அதைப் பரிமாறு கிறவன். ஆனதினாலே நன்மை செய்தால் தவாபும், தீமைசெய் தால் அதாபும் பெறுவானென்று ஈமான் கொள்ளுகிறது.

ஆகையால் இவ்வாறு உறுதியில் ஒன்றையேனும் சந்தேகப் படுகில் ஈமான் நிலைப்படாதென்றவாறு.

## முழுக்கின் விதிகள்.

இஸ்லாத்தியல்பையுடைய ஆண் பெண் ணென்னும் இரு வகைச் ஜாதியாருக்கும் ஆறு வகைக்கொண்டு முழுக்கு விதி யாகும். அதில் ஆண் பெண் இருவருக்கும் பொதுவானது 3. பெண் பிள்ளைகளுக்குத் தனியாக 3. முழுக்காளரில் ஆண் பிள்ளை கள் செய்வதற்கு ஹறாமாகுஞ் செயல் 5. பெண்பிள்ளை செய்வ தற்கு ஆகாச் செயல் 8.

## பெருந்துடக்கு நீக்குவதற்கு.

பறுலு 3. ஷறத்து 4. சுன்னத்து 5. சிறு துடக்கு நீங்க உலூ எடுப்பதில் உள்ள ஷறத்து 5. பறுலு 6. சுன்னத்து 10. உலூவை முறிச்சலாக்கும் வகை 5. உலூவில்லார் செய்வதற் காகாச் செயல் 3.

## தொழுகையின் விதிகள்.

தொழுகைக்கு எய்துவார் முன்னர் விளங்கி அறிய வேண்டிய விதியாகிய ஷறத்து 10. தொழுகையிற் பறுலாகிறது நினைப்பில் 1. மொழிச்சலால் 5; செயலால் 3. ஆக 19.

இப்பறுலுகளெல்லாம் முற்பட்ட ஒரு றக்ஆத்திலும், பிற்பட்ட அத்தஹிய்யாத்திலும் முடிவாயின. இது நினைப்பதிலும் மொழிச்சொர்க்களாலும் செயலாலும் முற்பட்ட றக்ஆத்திலுள்ள பறுலு 14. மொழிச்சொல்களாலும் செயல்களாலும் முடிவில் வரும் அத்தஹிய்யாத்திலுள்ள பறுலு 5.

இனி மற்றும் றக்ஆத்துகள் ஒவ்வொன்றிற்கு முன்னர் நிய்யத்தும்,

| | |
|---|---|
| முற்பட்ட தக்பீறுமன்றி பறுலு | 12 |
| ஸுபுஹுத்தொழுகை முற்றிலும் பறுலு | 31 |
| லுஹறுத் தொழுகை முற்றிலும் பறுலு | 55 |
| அஸறுத் தொழுகை முற்றிலும் பறுலு | 55 |
| மக்ரிபுத் தொழுகை முற்றிலும் பறுலு | 43 |
| இஷாத் தொழுகை முற்றிலும் பறுலு | 55 |

ஆக இவ்வைந்து வக்துத்தொழுகையில் மேற்சொல்லிய பறுலு பத்தொன்பதிலும் இசைந்த ஷறத்துகள் 71. தொழுகையில் விடப்படாது அப்ஆலு சுன்னத்துகள் 6. தொழுகையிற் பொருந்தா மக்றூஹு 20. தொழுகையின் வழுவகற்றும் ஸஜ்தாஸஹ்வெனும் ஏதுக்கள் 10. தொழுகையை முறிக்கும் நீராவழுக்கங்கள் 11.

ஆகையால் தொழுகையிலுள்ள ஷறத்துகளும், பறுலுகளும், இருவகை சுன்னத்துகளும் மற்றுமழகையுந், தொழுகையும் பிரிவும் விரிவும் எல்லாம் முன்னர் அச்சிற்பதிப்பித்துள்ள தக்க சுறாதென்னுஞ் ஸலாத்து லறுக்கான் மாலையிற் கண்டறிந்து கொள்க. இன்னமும் தொழுகையிலுள்ள மேற்பட்ட ஷறத்து முதலான விரிவு பிரிவுகளெல்லாம் பெறுநூலிற் கண்டறிந்து கொள்க.

இஸ்லாத்தியல்பை யுடைய இருவகை ஜாதியாரும் முன்னர் ஜுனுபெனும் பெருந்துடக்கை நீக்கி சிறு துடக்கை நீக்குதலெனும் உலூவை நிலை நிரப்பமாக வுடுத்த பின்னர் நிலை நின்று மேல் நோக்கி இருகை யேந்தி இந்த துஆவை ஓதவும்.

## உலூவின் துஆ.

அல்லாஹும்மஜ் அல்னீ மினத் தவ்வாபீன வஜ்அல்னீ மினல் முத்ததஹ்ஹிரீன் வஜ்அல்னீமின் இபாதி கஸ்ஸாலிஹீன் ஸுபுஹான கல்லாஹும்ம வபிஹம்திக அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லா அந்த அஸ்தஃபிறுக வஅதூபு இலைக வஸல்லல்லாஹு அலன்னபிய்யி முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லம அஜ்மஈன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

திருபாங்கிட்ட திருமொழி செவியிற் கேட்டவுடனே எப்பேச்சும் எப்பராக்கும் ஒழித்து (மறுஹபன் பில்காயிலி அத்லன் மர்ஹபன் பிஸ்ஸலாதி அஹ்லா வஸஹ்லா) என்று சொல்லி அம்மொழியையுஞ் சொல்லவும். (அஷ்ஹது அன்லாயிஹ இல்லல்லாஹு) வென்றபோது அதுபோற் சொல்லவும். (அஷ்ஹது அன்ன முஹம்மதர் றஸூலுல்லாஹி) யென்றபோது அதுபோற் சொல்லிக்கொண்டு, றஸூலுல்லாவுடைய பேர் வரிசைக்காக (குர்றத்து ஐனீ பிக ஹபீபீ யாறஸூலுல்லாஹி) யென்று இம்மொழிச்சலோடும் இருகைப் பெருவிரலேயுஞ் சேர்த்து கண்களிலொத்தி முத்திக்கொள்ளவும். (ஹைய்யா அலஸ்ஸலாஹ் ஹைய்யாஅலல்பலாஹ்) என்றபோது (லாஹௌல வலாகுவ்வத இல்லா பில்லாஹில் அலிய்யில் அலீம்) என்றும், ஸுபுஹுடைய பாங்கில் (அஸ்ஸலாத்து கைறுன் மினன்னவ்ம்) என்றபோது (சதக்த வ்பரிர்த வபில்ஹக்கி நதக்த) என்றும் (கத்காமதிஸ்ஸலாத்) என்றபோது (அகாமஹல்லாஹு வ அதாமஹா மாதாமதிஸ் ஸமாவாத்து வல்அர்லுவஜ அலனீ மின்ஸாலிஹீ அஹ்லிஹா) என்று சொல்லவும் பாங்குச்சொல்லி மற்ற மொழிக்கெல்லாம் முஅஸ்ஸின் சொல்லுகிறதுபோல் சொல்லி முடிந்த பின்பு இருகையும் ஏந்தி இந்த துஆவை யோதிக்கொள்ளவும்.

### பாங்கு இகாமத்துடைய துஆ.

அல்லாஹும்ம ஸல்லிஅலா ஸெய்யிதினா முஹம்மதின் வஅலாஆலி ஸெய்யிதினா முஹம்மதின் வபாரிக் வஸல்லிம் அலேஹி அல்லாஹும்ம றப்பஹாதிஹித் தஃவதித் தாம்மதி வஸ்ஸலாதில் காயிமதி ஆத்தி ஸெய்யிதினா முஹம்மதனில் வஸீலத வல்பலீலத வத்தறஜதர் ரபீஅத்தல் ஆலியதஷ் ஷரீபத வப்அதுஹு மகாமன் மஹ்மூதனில்லதீ வஅத்தஹு வருஸுக்னா ஷபாஅதஹு வஅவ்ரித்னா ஹௌலஹு யௌமல் கியாமதி இன்னக லாதுக்லிபுல் மீஆது வஸல்லல்லாஹு வஸல்லம அலா ஸைய்யிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன்.

பிறகு கிபுலாவின் திசையை முன்னோக்கி நின்று இருகைகளையும் உயர்த்தி நிய்யத்து செய்து தக்பீர் கட்டுகிறது.

### தக்பீரு கட்டுகிற மொழி.

### ஸுபுஹுடைய நிய்யத்து.

(ஸுன்னத்துக்கு) உஸல்லீ ஸுன்னதஸ் ஸுபுஹி றக்அதைனி லில்லாஹிதஆலா அல்லாஹு அக்பர்.

(பறுலுக்கு) உஸல்லீ பர்லஸ் ஸுபுஹி றக்அதைனி அதாஅன் லில்லாஹிதஆலா அல்லாஹு அக்பர்.

## லுஹருடைய நிய்யத்து.

(ஸுன்னத்துக்கு) உஸல்லீ ஸுன்னதல் லுஹரி றக்அதைனி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்.
(பறுலுக்கு) உஸல்லீ பர்லல்லுஹரி அறுபஅ றக்ஆதின் அதாஅன் லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்.

## அஸருடைய நிய்யத்து.

(ஸுன்னத்துக்கு) உஸல்லீ ஸுன்னதல் அஸ்ரி றக்அதைனி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்.
(பறுலுக்கு) உஸல்லீ பர்லல் அஸ்ரி அறுபஅ றக்ஆதின் அதாஅன் லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்.

## மஃரிபுடைய நிய்யத்து.

(ஸுன்னத்துக்கு) உஸல்லீ ஸுன்னதல் மஃரிபி றக்அதைனி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்.
(பறுலுக்கு) உஸல்லீ பர்லல் மஃரிபி ஸலாஸ றக்ஆதின் அதாஅன் லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்.

## இஷாவுடைய நிய்யத்து.

(ஸுன்னத்துக்கு) உஸல்லீ ஸுன்னதல் இஷாயி றக்அதைனி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்.
(பறுலுக்கு) உஸல்லீ பறுலல் இஷாயி அர்பஅ றக்ஆதின் அதாஅன் லில்லாஹித் தஆலா அல்லாஹு அக்பர்.

நிய்யத்து செய்வதில் பொருள் தெரிய வேண்டிய தவசிய மானதால் உதாரணமாக ஸுப்ஹுடைய சுன்னத்து தொழுகை நிய்யத்திற்கு பொருள் எழுதப்பட்டிருக்கிறது.

பொருள்.—ஸுப்ஹுடைய சுன்னத்து இரண்டு றக்கஅத்தையும் அல்லாஹுக்காக தொழுகிறேன் என்று நிய்யத்து செய்து அல்லாஹு அக்பர் என்று தக்பீர் கட்டுதல். றக்கஅதைனி என்ருல் 2 றக்அத்து; ஸலாஸ றக்ஆத்தின் என்ருல் 3 றக்அத்து; அற்பஅ றக்ஆத்தின் என்ருல் 4 றக்அத்து என்றும் பொருள் கொள்ளவேண்டும். இதன்படி மற்ற நிய்யத்துகளுக்கும் பறுலானுல் பறுலென்றும், அதாவானுல் அதாவென்றும், கலாவானுல் கலாவென்றும், இமாமத்துச் செய்தால் இமாமன் என்றும், இமாமைத் துடர்ந்தால் மஃமூமன் என்றும் அந்தந்த வக்தையுங்கருதி, றக்கஅத்தையும் குறித்து, நிய்யத்துடன் தக்பீர் சொல்லி கட்டவும். அதன் பின்னர் வஜ்ஜஹ்து. வஜ்ஹியலில்லதீ பதரஸ்ஸமாவாதி வல் அர்விஹனீபன் முஸ்லிமன் வமாஅனு மினல் முஷ்ரிகீன், இன்னஸ்ஸலாதி வனுஸ்கிவமஹ்யாய வமமாதி லில்லாஹி ரப்பில் ஆலமீன்,

Q7:4 N46

ல்லாஷரீகலஹு வபிதாலிக உமிர்த்து வஅன மினல் முஸ்லிமீன் யென்று ஒதி பின்பு அஊதும், பிஸ்மியும், பாத்திஹாவு மோதி ஆமீன் கூறி ஒர் ஸூறத்தாயினும், மூன்றாயத்தாயினும் ஒதிமுடித்து இருகையையும் உயர்த்தி அல்லாஹு அக்பர் என்கிற சொல்லு டனே குனிந்து றுக்கூவிற் றரித்தபோது (ஸுப்ஹான றப்பியல் அளீம் வபிஹம்திஹி) யென்று 11-விடுத்தம் அல்லது 3-விடுத்த மாவது சொல்லிப் பிறகு (ஸமி அல்லாஹு லிமன்ஹமிதா) வென்ற சொல்லுடனே றுக்கூஉவிட்டு உயர்ந்து இஃதிதாலில் வந்து இரு கையையும் உயர்த்தி (றப்பன லகல் ஹம்து மில்அஸ் ஸமாவாதி வமில் அல்அர்லி வமில்அமாஷிஃத மின்ஷையின் பஃதஹு) யென்றோதிப் பின்பு அல்லாஹு அக்பர் என்ற சொல்லுடனே ஸுஜூதுக்குப்போகவும். அதில் (ஸுபுஹான றப்பியல் அஃலா வபிஹம்திஹி) வென்று 11-விடுத்தம் அல்லது 3-விடுத்தமாவது சொல்லிப் பின்பு அல்லாஹு அக்பர் என்ற சொல்லோடு தலையை யெடுத்து நடுயிரிப்பில் வந்து இருந்து (றப்பிக்பிர்லீ வர்ஹம்னீ வஜ்புறனீ வர்பஃனீ வர்ஸுக்னீ வஹ்தினீ வஆபினீ) யென்று ஒதவும். பின்பு அல்லாஹு அக்பர் என்று தக்பீர் சொல்லி இரண்டாம் ஸுஜூதில் போய் முந்தின ஸுஜூதில் சொன்னது போல் சொல்லிக்கொண்டு தக்பீறுடனே தலையெடுத்து எழுந்து நிலையிலாகி இனி மற்றும் றக்ஆத்துக்கெல்லாம் மனதிற்றரித்த நிய்யத்துடனே அவூது முதலான ஒ்லாழிச்சல்களாலும் நிலை முத லான செயல்களாலும் றக்அத்தை முடிக்கவேண்டும். ஸுபுஹு தொழுகையில் இரண்டாம் றக்அத்தின் இஃதிதாலில் (நிலையில் வரும்) அப்ஆலு ஸுன்னத்தாகிய குனூதை நின்று இருகையேந்தி ஒதவேண்டும்.

## ஸுப்ஹுடைய குனூத்து.

அல்லாஹும் மஹ்தினீ பீமன்ஹதைத வஆபினீ பீமன் ஆபைத வத வல்லனீ பீமன் தவல்லைத வபாரிக்லீ பீமா அஃதைத வகினீஷர்ரமா கலைத பஇன்னக தஃலீ வலாயுக்லா அலைக வஇன்னஹு லாயதில்லு மன்வாலைத்த வலாய இஸ்ஸுமன் ஆதைத்த தபாரக்த றப்பன வதஆலைத பலகல்ஹம்து அலாமா கலைத அஸ்தக்பிறுக வஅதூபு இலைக வஸல்லல்லாஹு அலன் னபிய்யி முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லம.

யென்று ஒதி தக்பீறுடனே ஸுஜூதிற்கு போகவும். மற்றத் தொழுகையில் இரண்டாம் றக்அத்து முடிவில் வரும் அப்ஆலு

113726

ஸுன்னத்தாகிய அத்தஹிய்யாத்தை றஸூலுல்லாபேரில் சொல்லும் ஸலவாத்து மட்டும் எல்லாயிருப்பையும்போல் இடது கால் மேலிருந்து ஓதுகிறதில் (இல்லல்லாஹு) யென்ற சொல் வரும்போது இயல்பாக வலதுகை கலிமா விரலை உயர்த்தலோடும் ஓதியெழுந்து மற்றும் றக்அத்துகளை முடித்து முடிவில் வரும் அத்தஹிய்யாத்தை இருப்பில் இருந்து ஓதவும்.

## அத்தஹிய்யாத்து.

அத்தஹிய்யாத்து அல்முபாரகாத்து அஸ்ஸலவாத்து அத்தைய்யிபாத்து லில்லாஹி அஸ்ஸலாமு அலைக அய்யுஹன் னபிய்யு வறஹ்மதுல்லாஹி வபறகாத்துஹு அஸ்ஸலாமு அலைனு வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன். அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹி அல்லாஹும்ம ஸல்லிஅலா முஹம்மதின் யென்று முந்தின அத்தஹிய்யாத்தின் இருப்பில் ஓதவும். பிந்தின அத்தஹிய்யாத்தினிருப்பில்) 'வஅலா ஆலிமுஹம்மதின் கமா ஸல்லைத அலா இபுருஹிம வபாரிக் அலா முஹம்மதின் கமாபாரக்த அலா இபுருஹிம வஅலா ஆலி இபுருஹீம இன்னக ஹமீதுன் மஜீத்' என்று சேர்த்து ஓதவும்.

அல்லாஹும் மக்பிர்லீ மாகத்தம்து வமா அக்கற்து வமா அஸ்ரர்து வமா அஃலன்து வமா அஸ்றப்து வமா அன்த அஃலமு பிஹி மின்னீ இன்னக அன்தல் முகத்திமு வஅன்தல் முஅக்கிருலாயிலாஹ இல்லா அன்த ஸுபுஹானக இன்னீ குன்து மினல் லாலிமீன்.

அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மின் அதாபில் கப்ரி வமின் அதாபின்னுரீ வமின் பித்னதில் மஹ்யா வல்மமாதி வமின் பித்னதில் மஸீஹித்தஜ்ஜால்.

அல்லாஹும்ம இன்னி லலம்துநப்ஸீ லுல்மன் கஸீறன் கபீறன் வலா யக்பிருஸ்ஸுனூப இல்லா அன்த பக்பிர்லீ மக்பிறதன் மின் இந்திக வர்ஹம்னீ இன்னக அன்தல் கபூருர்றஹீம்.

என்று ஓதி முடித்து வலது புறத்திலும், இடது புறத்திலும் உண்டான மலக்குகளுக்கும், முஃமினுகிய ஜின்களுக்கும் முஃமினுகிய மனிதர்களிருந்தால் அவர்களுக்கும் ஸலாம் சொல்லுகிறேன் யென்றும் ஒரு இமாமை தொடர்ந்தால் அவர் சொல்லும் ஸலாத்துக்கு பிரத்தியென்றும் நினைத்தலோடு (அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மதுல்லாஹி) யென்கிற சொல்லோடு கண்ணைப் புறம்தெரிய

இருபுரமும் திருப்பிப்பார்த்து தொழுகையை நிறைவேற்றி முடித்து நீங்கினதின் பின்னர் இஸ்திக்பாரு ஓதவும்.

## இஸ்திக்பாறு.

அஸ்தக் பிறுல்லாஹல் அலீம் 3. அல்கரீம் அல்கதீம் அர்ரஹீ மல்லதீ லாயிலாஹ இல்லல்லாஹு வல்ஹையுல்கையூம் மின் குல்லி தன்பின் வகதீஅத்தின் வஅத்தூபு இலைஹி வஅஸ் அலுஹுத் தெளபா, அல்லாஹும்ம அன் தஸ்ஸலாம் வமின்கஸ்ஸலாம் வஇலைக யர்ஜிஉஸ்ஸலாம் ஹையினா றப்பனா பிஸ்ஸலாம் வஅத்கில்னா பிறஹ்மதிக தாறஸ்ஸலாம் தபாரக்த றப்பனா வதஆலைத யாதல் ஜலாலிவல் இக்றாம், லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல்முல்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீது பியதிஹில் கைர். வஹுவ அலாகுல்லி ஷையின்கதீர். என்று இந்த கலிமாவை 10 விடுத்தமோதி பிறகு ஹுவல் அவ்வலு வல் ஆகிறு வல்லாஹிறு வல்பாதினு வஹுவ பிகுல்லி ஷையின் அலீம் லைஸகமித்லிஹீ ஷைவுன் வஹுவஸ்ஸமீஉல் பஷீர், ஹஸ்புனல்லாஹு நிஃமல் வகீலு நிஃமல் மெளலா வநிஃமன்னஸீறு. அல்லாஹும்ம ஸல்லிஅலா ஸையிதினா முஹம்மதின் வஅலாஆலி ஸெய்யிதினா முஹம்மதின் வபாரிக் வஸல்லிம் அலைஹி வஸல்லி அலா ஜமீயில் அன்பியாயி வல்முர்ஸலீன் வஅலா மலாயிகதிகல் முகர்ரபீன், வஅலா இபாதிகஸ்ஸாலிஹீன், வஅலா அஹ்லி தாஅதிக அஜ்மஈன், வற்ஹம்னா மஅஹும் பிறஹ்மதிக யாஅர்ஹமர்றாஹிமீன் யென்று ஓதிய பின்பு (இலாஹீ, ஸுபுஹானல்லாஹி) யென்ற 33-விடுத்தஞ் சொல்லி (ஸுபுஹானல்லாஹில் அலீம் தாயிமன் அல்ஹம்து லில்லாஹி) யென்று 33 விடுத்தம் ஓதவும். பிறகு அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன் ஸப்பித்னா அலாதீனில் இஸ்லாமி அல்லாஹு அக்பர் என்று 33-விடுத்தம் ஓதவும். பிறகு அல்லாஹு அக்பர் கபீறு வல்ஹம்து லில்லாஹி கஸீறு வஸுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி புக்ரதன் வஅஸீலா லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு லஹுல் முல்க்கு வலஹுல் ஹம்து யுஹ்யீ வயுமீது பியத்ஹில்கைற் வஹுவ அலாகுல்லி ஷையின் கதீறு, அல்லாஹும்மலாமானிஅ லிமா அஃதைத்த வலாமுஃதியன் லிமா மனஃத வலாறுத்த லிமாகலைத்த வலா முபத்தில லிமாஹகம்த வலாயன்பவு தல்ஜத் திமின்கல் ஜித்து பஃலம் அன்னஹு அப்லலுஸ்ஸிக்ரி (லாயிலாஹஇல்லல்லாஹ்) என்று 10-விடுத்தம் சொல்லுகிறது, பிறகு லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி ஹக்கன் அலைஹா நஹ்யா வஅலைஹா நமூத்துவ அலைஹா நுப்அது இன்ஷா அல்லாஹு தஆலா.

அல்லாஹும்ம ஸல்லி வஸல்லிம் வபாரிக் அலா ஸெய்யிதினா முஹம்மதின் ஸெய்யிதில் அவ்வலீன், அல்லாஹும்ம ஸல்லி வஸல்லிம் வபாரிக் அலா ஸெய்யிதினா முஹம்மதின் ஸெய்யிதில் ஆகிரீன், அல்லாஹும்ம ஸல்லிவஸல்லிம் வாபாரிக் அலா ஸெய்யிதினா முஹம்மதின் ஸெய்யிதில் முத்தகீன் ஜதல்லாஹு அன்னா நபிய்யினா முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம பிமா ஹுவ அஹ்லுஹு.

அல்லாஹும்ம மர்ல அன்ஸாதாத்தினா அபீபக்ரினிஸ் ஸித்தீகித் தகிய்யி வஉமறல் பாறூகுன்னகிய்யி வஉஸ்மான தின் னூறைனிஸ் ஸகிய்யி வஅலிய்யினில் முறத்தலவ்வபிய்யி வஅனிஸ் ஸித்ததில் பாகீன், வஅனில் ஹஸனி வல்ஹுஸைனி வஅன் ஹம்ஸ வல்அப்பாஸி வஅனில் முஹாஜிரீன வல்அன்ஸாரி வஅன் அஸ்ஹாபி றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

அல்லாஹும்ம ஸல்லி அலன்னபிய்யில் முஸ்தபா ஹபீபிக முஹம்மதின் அப்திக வரஸூலிகன் னபிய்யில் உம்மிய்யி வஅலா ஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லிம் என்று 10-விடுத்தம் ஓதவும். பிறகு (வபாரிக் வஸல்லிம் அலைஹி வஸல்லி அலா ஜமீஇல் அன்பியாயி வல்முர்ஸலீன் வஅலா மலாயிகதிகல் முகர்ரபீன் வஅலா இபாதி கஸ்ஸாலிஹீன் வஅலாஅஹ்லி தாஅதிக அஜ்மஈன் வர்ஹம்னா மஅஹும் பிறஹ்மதிக யாஅர்ஹமர் றூஹிமீன்) யென்றோதி பிறகு பாத்திஹா ஓதி இந்த துஆவை ஓதவும்.

## துஆ.

அல்லாஹும்ம ஸல்லி அலாமுஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் லகல்ஹம்து யாறப்பி யாமஃபூது யாஅல்லாஹு யாஅல்லாஹு யாறஹ்மானு யாறஹ்மானு யாறஹீமு யாறஹீமு அல்அமான் அல்அமான் மின் ஸவாலின் ஈமானி யாதாயிமா அல் மஃறூபி யாகதீமல் இஹ்ஸான் யாஹாதியல் முலில்லீன் இஹ்தினா பிஹக்கி இய்யாக நஃபுது வஇய்யாக நஸ்தஈன் பிறஹ்மதிக யாஅர் ஹமர்றூஹிமீன். வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன் என் றோதி பிறகு பாத்திஹாவும் மூன்று சூறாவும் ஓதி துஆ ஓதவும்.

## ஸுபுஹுடைய துஆ.

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின், அல்லாஹும்மஜ்அல் ஸபாஹனா ஹாதா ஸபாஹன் முபாரகன் மினல்சைரி கரீபன் வஅனிஷ்ஷர்ரி பயீதன் லாகாஸியன் வலா காஸிறன் வலாமஹ்றாம அல்லாஹும்மஜ்அல் அவ்வலயௌமினா ஹாதாலனா ஸலாஹன் வஔஸதஹு பலாஹன் வஆகிறஹு நஜாஹன் வறபாஹா அல்லாஹும்ம ஸப்பிஹ்னா மின்க ஸபாஹர்ரிலாயி வக்பினா ஷற்றமாபில்கலாயி வலாது அஸ்ஸிப்னா பில்ஜருயிமி யாகரீம் யாறஹீம் அல்லாஹும்மஜ்அல் ஸபாஹனா ஸபாஹஸ்ஸாலிஹீன் வமஸா அனா மஸா அஸ்ஸாகிரீன் வகுலூபனா குலூபல் காஸிஈன் வஅப்தானனா அப்தானல் முதீஈன் வஅஃமாலனா அஃமாலல் முத்தகீன் வஅல்ஸினதனா அல்ஸினதஸ் ஸாகிரீன் வனப்பிஹ்னா அன்னௌமதில் காபிலீன் வஷாரிக்னா பீ துஆஇஸ்ஸாலிஹீன் வர்ஸுக்னல் ஜன்னத யாறப்பல் ஆலமீன். வஸல்லல்லாஹு வஸல்லம அலா ஸையிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

## ளுஹறுடைய துஆ.

அல்லாஹும்மஸல்லி அலா ஸையிதினா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின், அல்லாஹும் மக்துப் லிகுல்லி வாஹிதின் மின்னா பருஅதன் மினன்னாரி வஅமானன் மினல் அஸாபி வகலாஸன் மினல் ஹிஸாபி வஜவாஸன் அதஸ்ஸிருத்தி வனஸீபன் மினல் ஜன்னதி வனஜாதன் மினன்னார் அல்லாஹும்ம யாமுகல்லிபல் குலூபி ஸப்பித் குலூபனா அலாதீனிக வதா அதிக வஈமானிக யாஅல்லாஹ் வஸல்லல்லாஹு அலா ஸையிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

## அஸ்றுடைய துஆ.

அல்லாஹும்மஸல்லி அலா ஸையிதினா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின், அல்லாஹும்ம இன்னா நஸ்அலுக ஸலாமதன் பித்தீனி வத்துன்யா வஆபியதன் பில்ஜஸதி வஸியாததன் பில் இல்மி வல்ஹுதா வபறகதன் பிர்ரிஸ்கி வஸிஹ்ஹதன் பில் அக்லி

வதௌபதன் கப்லல்மௌதி வருஹதன் இந்தல்மௌதி வமக்பிற தன் பஃதல்மௌதி யாஸாமிஅ குல்லி ஸௌதின் வஹவ்வின் அலேஹ ஸகறுத்தல் மௌதி வஸல்லல்லாஹு வஸல்லம அலா ஸையிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன் வல் ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

## மஃரிபுடைய துஆ.

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் அல்லாஹும்ம இன்னா அம்ஸைனா மின்க பீநிஃமதின் வஆபியதின் வஸித்ரின் பஅத்திம்ம நிஃமதக அலைனாவஆபி யதக வஸித்றக பித்தீனி வத்துன்யா வல்ஆகிறதி இன்னக அலா குல்லி ஷைஇன் கதீற் வபில் இஜாபத்தி ஜதீறுன் நிஃமல் மௌலா வனிஃமன்னஸீற். *அல்லாஹும்ம அஜிர்னா மினன்னார் ஸாலிமீன் வஅத்கில்னல் ஜன்னத பிஸலாமின் ஆமினின் வகினா றப்பனாஷர் ரல்லாலிமீன் பன்ஸுற்னா அலல்கௌமில் காபிரீன் இலாஹனா வர் ஸுக்னன்னஹற இலாவிகாஇ வஜ்ஹிகல்கரீம் மஅலிகாயி ஸையி தினா முஹம்மதின் ஸல்லல்லாஹு அலேஹி வஸல்லம் அஜ்மஈன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

## இஷாவுடைய துஆ.

அல்லாஹும் மஹபஹுனா பீஹுல்மதில்லைலி கமா ஹபில்த் தனா யாறப்பனா பீ லௌஇன்னஹார் வஸ்ரிப் அன்னா பலா அல் லைலி கமா ஸரப்த அன்னா பலா அன்னஹார் வஹ்ஷுர்னா மஅல் அப்றார் வஜ்அல் முன்கலபனா இலாதாரில்கறார் வனஜ்ஜினா மினன் னாரி வக்பு அன்னல் அவ்ஸார். யாகப்பார் அல்லாஹும்மஹ்பஹுனா யாபையாஹு மின் ஜமீஇல்பலா பா வல்அஃதாயி வல்அம்றால் பிறஹ் மதிக யாஅர்ஹமர் ராஹிமீன் வஸல்லல்லாஹு அலா ஸையிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லம் அஜ்மஈன் வல் ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

இந்த துஆக்களுடனே நாடிய நற்கருமங்களுக்கெல்லாம் மற் றுந் துஆக்களையும் சேர்த்துக்கொண்டு ஓதலாம்.

இங்ஙனம் வகுத்த ஐந்துவக்து துஆக்களில் ஒரு இமாம் தமக் கும் தம்மைத் தொடர்ந்து தொழுதவர்களுக்குமாக வேண்டி ஓதுகிற முறையாக மேற்பாடங்களில் எழுதி யிருந்ததின்படியே வருத்தினது.

* அல்லாஹும்ம அஜிர்னா மினன்னார்:—இதை எழு தடவை ஓதவும்.

## கஸ்று தொழுகை.

கஸ்று தொழுகையில் பறுலாகிய நாலு றக்அத்துத் தொழுகையை சுருக்கி கஸ்றுசெய்து இரண்டுறக்அத்தாகத்தொழுவதற்கு இசைந்த ஷறத்துகள் ஏழு. 1-வது ஸபர் போகிறவன் தான் நாடிப் போகிற ஊர் புறப்படுகிற ஊரில் நின்றும் ஹாஷிம் நாற்பத்தெட்டு நாழிகை அதாவது ஒரு இரவுபகல் செல்லக்கூடிய தூரமிருக்க வேண்டும். 2-வது போகிற ஊரைப் புறப்படும் முதலே குறித்துக் கொள்ள வேண்டும். 3-வது பாவம் ஏற்படாத ஸபராகப் போக வேண்டும். 4வது ஸபரிடத்தில் நிறப்பமாகத் தொழுகிறவனைத் தொடர்ந்து தொழுகாமலிருக்கவேண்டும். 5-வது தொழும் இடத்தில் அவ்வல் தக்பீறில் கஸ்றென்றும் நிய்யத்துவைக்க வேண்டும். 6-வது நிய்யத்தை பேதமாக்குகிறதை விட்டும் பேணிக்கொள்ள வேண்டும். 7-வது தொழுது தீருமளவும் ஸபறு தரிபாடாக இருக்கவேண்டும்.

## ஜம்உ (சேர்த்து) தொழுகிற வகை.

ஸபரிடத்தில் லுஹறையும் அஸ்றையும் ஜம்உ செய்து மக்ரிபையும் இஷாவையும் ஜம்உ செய்து முந்தின வக்திலாவது பிந்தின வக்திலாவது இரண்டு வக்குத் தொழுகையை ஒரு வக்தில் தொழுகிறது. அதில் முந்தின வக்தில் ஜம்உ செய்கிறதற்கு ஷர்த்துகள் 4. 1-வது முந்தின வக்துத் தொழுகையை முற்படத் தொழுகிறது. 2-வது முந்தினதொழுகை நிறப்பமாக தொழும் முதலே பிந்தின வக்துத்தொழுகையை ஜம்உ செய்கிறேனென்று நிய்யத்து வைக்கிறது. 3-வது பிந்தின தொழுகைக்கு இஹ்றாம் தக்பீர்கட்டி முடிகிறவரைக்கும் ஸபரில் தரிபாடாக இருக்கிறது. 4-வது இரண்டு தொழுகைக்குத்தொடர்ப்பு பற்றிக்கொள்ளுகிறது.

இனி பிந்தின வக்தில் ஜம்உ செய்கிறதற்கு ஷர்த்துகள் 2. அதில் 1-வது முந்தின தொழுகையின் வக்தில் ஒரு ரக்அத்துத் தொழும் அளவிற்கு நேரமிருக்கும் வரையில் பிந்தின வக்தில் இந்தத் தொழுகையை ஜம்உ செய்துத் தொழுகிறதாக நிய்யத்துச் செய்து கொள்ளுகிறது. 2-வது இரண்டாந் தொழுகை தொழுது தீருமளவும் ஸபரில் தரிபாடாக இருக்கிறது. ஆகையால் ஸபராளருக்குக் கஸ்றும் ஜம்உம் தொழஆகும். ஸபராளியல்லாத ஏற்பாடான உதுறுளறுக்கு ஜம்உ மாத்திரந் தொழ ஆகும்.

## ஸபறு தரிபடுத்தலும் நீங்குதலும்.

ஒருவன் தன்னுடைய ஊர் எல்லையைக்கழித்ததின் பின்னாலே ஸபரு தரிபாடாயிற்று. மீண்டும் தன்னுடைய ஊர் எல்லையில் வந்தாலும் போகும்பொழுதும் ஒரு ஊரில் தரிபடுகிறதை நிய்யத்துச் செய்தாலும் அல்லது போனநாளும் புறப்படுகிற நாளுந்தவிர நான்கு நாள் ஒரு ஊரில் தரிபடுகிறதை நிய்யத்துச் செய்தாலும் ஸபர் நீங்கிற்று.

இனி தன்னுடைய ஹாஜத்துக்காக வேண்டி ஒரு ஊரில் குறைந்தநாளைக்கொண்டு தரிபட்டதில் நிறைவேறுமையால் வேலையடங்களிலும் நிறைவேறும் என்கிறதை ஆதரவுவைத்தால் பதினெட்டு நாள் வரையும் கஸ்று ஜம்உ தொழுவான்.

## கஸ்று தொழுகைக்கு தக்பீர்.

உஸல்லி பறுலல் லுஹரி கஸ்றன்
லில்லாஹித் தஆலா அல்லாஹு அக்பர்.

அஸறுக்கும் இஷாவுக்கும் இதுபோலவே அந்தந்த வக்தைச் சொல்லிக் கட்டுகிறது.

## கஸ்று ஜம்உக்கு முத்தின வக்த்திற்கு தக்பீர்.

உஸல்லி பறுலல்லுஹரி கஸ்ரன் வஜம்அன்
மஅல் அஸ்ரி லில்லாஹி அல்லாஹு அக்பர்.

பிந்தின வக்துக்கும் மற்ற இரண்டு வக்துக்கும் அந்தந்த வக்தைச்சொல்லிக்கட்டுகிறது.

## ஜும்ஆ தொழுகை.

ஜும்ஆ தொழுகை நிரப்பமாகிறதற்கு உரிய ஷர்த்துகள் ஆறு. 1-வது பாலிகாய், ஆகிலாய், முஸ்லிமாய், நாட்டா மகனாய் செவிடில்லாதவனாய், ஜும்ஆத் தொழுகிற ஊரிலுள்ள ஆண்பிள்ளைகளாக 40-பேர் கூடவேண்டும். 2-வது குத்பா ஓதுகிறதும் தொழுகிறதும் அந்த ஊர் எல்லைக்குள்ளாகவேண்டும். 3-வது ஓதலும் வணக்கமும் லுஹறு வக்திலாகவேண்டும். 4-வது இரண்டு குத்பா ஓதவேண்டும். 5-வது குத்பாக்கள் ஓதி தீர்ந்ததின் பின் தொழுகவேண்டும். 6-வது ஜமாஅத்துடனே முந்தின றகஅத்தில் தொழவேண்டும்.

இந்தத்தொழுகைக்கு 40 பேர் வேணுமென்று உறை கொண்டமையால் இவர்களுக்குப் பின்னுலே எண்ணப்படலாகாதார் தக்பீறு கட்டவேண்டும்.

குத்பாவில் பறுலு ஐந்து. 1-வது அவ்வலிலே அல்ஹம்து லில்லாஹி என்று அல்லாஹுதஆலாவைப் புகழுகிறதும், 2-வது ஸல்லல்லாஹு அலாமுஹம்மதின் என்று ஸலவாத்துச் சொல்லுகிறதும், 3-வது தக்வாவைகொண்டு வஸீயத்துச் சொல்லுகிறதும், பறுலாகிய இந்த மூன்று மொழிகளும் இரண்டு குத்பாவிலும் மொழிகிறது பறுலுகளாம்- 4-வது இரண்டிலொரு குத்பாவில் ஒரு ஆயத்து ஓதுகிறதும், 5-வது பிந்தின குத்பாவில் முஃமினீன்களுக்கு ஆகிறத்தைக்கொண்டு துஆ கேட்கிறதுமாம்.

இனி குத்பாவுக்கு ஷர்த்துகள் 7. 1-வது கத்தீபு பெருந்துடக்கு சிறு துடக்கு இரண்டையும் நீக்கிக்கொள்ளுகிறதும், 2-வது அபத்தை மறைய வைத்துக்கொள்ளுகிறதும், 3-வது சக்தியுள்ளவரானல் நிலையில் நின்று ஓதுகிறதும், 4-வது குத்பாவை அறபு பாஷையில் ஓதுகிறதும், 5-வது இரண்டு குத்பாவுக்கிடையில் சற்றே தரிபட்டிருக்கிறதும், 6-வது குத்பாவின் பறுலுகள் எல்லாம் நிறைவேற அந்த நாற்பது பெயரும் கேட்டுக் கொண்டிருக்கிறதும் 7-வது இரண்டு குத்பாவுக்கும் அதன் பறுலுக்கும் தாமதியாது தொடர்புபற்றி கொள்ளுகிறதுமாம்.

ஜூம்ஆ தொழுகையின் தக்பீர்.

உஸல்லி பறுலல் ஜூம்அதி றக்அதைனி
மஃமூமன் லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்,

ஸஜதா திலாவத்து.

குறுஆன் ஓதுகிறபோது ஸஜதா வந்தால்
அஸ்ஜூது ஸஜததத்திலாவதில்
குறுஆனி லில்லாஹி அல்லாஹு அக்பர்

என்று தக்பீறு கட்டி ஸூஜூதிற் கிடக்கிறபோதும் தொழுகை நிலையில் ஓதுகிறபோதும் ஸஜதா வந்தால் அந்த நிலையை விட்டு ஸூஜூதிலா யிருக்கும்போது இதை ஓதவும்.

அல்லாஹும்ம லக ஸஜத்து வபிக ஆமன்து வலக அஸ்லம்து அன்த றப்பீ ஸஜத வஜ்ஹிய லில்லதீ கலகஹு வஸவ்வறஹு

வஷக்க ஸம்அஹு வபஸறஹு பிஹெளலிஹி வகுவ்வதிஹி பத பாறகல்லாஹு அஹ்ஸனுல் காலிகீன். அல்லாஹு றப்பில் ஆலமீன்.

## நோன்பு வைக்கிறதில் பறுலு 2.

1-வது நிய்யத்து வைக்கிறது. 2-வது முறிச்சலாகிற காரியங்களை விட்டு நீங்கிக்கொள்ளுகிறதுமாம். இனிஇதைச்சார்ந்த ஷர்த்துகள் 2. 1-வது இந்த நோன்பை வைக்கிறேனென்று நிய்யத்துக் கொள்கிறது. 2-வது பறுலான நோன்புக்கு அந்தந்த இரவில் நிய்யத்து வைக்கிறது.

## நோன்பின் முறிச்சல்கள்.

நிய்யத்தை மறந்தாலும், யாதொரு வஸ்துவைத் தின்றாலும், குடித்தாலும், துவாரங்களில் யாதொருவஸ்துவைப் புகுத்தினாலும், சேர்க்கை செய்தாலும், விந்தைவெளிபடுத்தினாலும், சத்தியை வருத்தினாலும், புத்தி மாறினாலும், குபிர் நிலைபட்டாலும், இது வல்லாது பெண்களுக்கு ஹைலானாலும், பிள்ளைப் பேறுனாலும், இரத்தத்திரளை மாங்கிஷத்திரளை விழுந்தாலும் முறிதலாயிற்று.

## நோன்புக்கு நிய்யத்துச் சொல்லுகிறது.

நவைது ஸெளமஹதின் அன் அதாயி பறுலி றமலான ஹாதிஹிஸ் ஸனதி லில்லாஹி தஆலா. இந்த வருஷத்து றமலான் மாதத்து பறுலான நோன்பை அதாவாக நாளைப்பிடிக்க நிய்யத்துச் செய்கிறேன், அல்லாவுக்காக என்று நிய்யத்துசெய்தபின் அல்லாஹுலாயிலாஹ இல்லா ஹுவல் ஹையுல்கையூம் அல்காயிமு அலாகுல்லி நப்ஸின் பிமாகஸபத். என்று 7 விடுத்தம் ஓதவும்.

## நோன்பு திறந்த பின் ஓதுகிற துஆ.

அல்லாஹும்ம லகஸும்து வஅலா ரிஸ்கிக அப்தற்து ஸஹப்ளமாவு வப்தல்லதில் உறூகு வதபதல் அஜ்று இன்ஷா அல்லாஹு தஆலா,

## தருவீஹின் விபரம்.

தக்பீறுகட்ட முதலே முஅஸ்ஸின் (அஸ்ஸலாத்து ஜாமிஅத்தன் றஹிமகுமுல்லா) யென்று சொன்னால், மற்றும் ஜனங்கள் அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி யென்று சொல்லியபின் தொழுகையைத் துடங்குவார்கள்,

## தருவீஹாத் தொழுகையின் தக்பீறு.

உஸல்லி ஸலாதத் தருவீஹி றக்அதைனி
லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்.

## முந்தின ஸலாமுக்குப் பிறகு.

ஸல்லல்லாஹு அலைக யாறஸூலல்லா, அல்லாஹும்ம ஸல்லி வஸல்லிம் அலைஹியென்று சொல்வார்கள். 2-வது ஸலாமுக்குப் பிறகு மும்அஸ்ஸின் (ஸல்லூ அலன்னபிய்யில் முஸ்தபா முஹம்மதின் வஆலிஹி) யென்று சொல்லுவார்கள். ஜனங்கள் அல்லாஹும்ம ஸல்லி அலா செய்யிதிறு முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் அமீறுல் முஃமினீன் ஸெய்யிதிறு அபூபக்கரினிஸ் ஸித்தீக் றலியல்லாஹு தஆலா அன்ஹு ஸல்லல்லாஹு அலைக யாறஸூலல்லாஹி அல்லாஹும்ம ஸல்லி வஸல்லிம் அலைஹி லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹி யென்றும் மற்ற ஒவ்வொரு ஸலாமின் (தொழுகையின்) முடிவில ஒன்றிற்கு கலிமாவும் ஒன்றிற்கு ஸலவாத்தும் அத்துடன் நாலு யார்களின் நாமத்தில் ஒவ்வொரு நாமமுமாகச் சேர்த்து ஓதவும்.

## நாமங்களாவது.

அமீறுல் முஃமினீன் அபூபக்கர்னிஸ் ஸித்தீக் (றலி) என்றும்
அமீறுல் முஃமினீன் உமறிப்னுல் கத்தாப் (றலி) என்றும்
அமீறுல் முஃமினீன் உதுமானிபுனு அப்பான் (றலி) என்றும்
அமீறுல் முஃமினீன் அலிய்யிபுனு அபீதாலிப் (றலி) என்றும்

அங்ஙனமதன் முறைபோல் ஒன்பது ஸலாம் முடிவிலுஞ் சொல்லிக்கொள்ளுகிறது. பத்தாம்ஸலாம்முடிவில் ஸுபுஹானல்லா, கலிமாவை மூன்று விடுத்தம் ஓதுகிறது. இது ஒரு இமாமைத் தொடர்ந்து தொழுதாலும் அவர் சொல்லும் ஸலவாத்துக்குப் பிரத்திபோலாகவும் மற்றவர்களுஞ் சொல்லுகிறது.

இனி பதினொரு மிரவுமுதலாக ஸலவாத்துடனே அல்லாஹும்ம இன்னக அபுவ்வுன் துஹிப்புல் அப்வ்வ பஃபு அன்னு யாகரீம் யாரஹீம் யஅல்லா பஹுஉன் மின்னல்லாஹி வநிஃமதன் வமக்பிறதன் வறஹ்மதன் வஆபியதன் வஸலாமதன் வநஸ்தக்பிறுல் லாஹ் வநஸ்அலுகல் ஜன்னத வனஊதுபிக மிநன்னார், என்று இந்த துஆவையும் வோதிக்கொள்ளுகிறது.

இதில் கலிமாவும் ஸலவாத்துஞ் சொல்லுகிறது வழக்கத்தா லென்றறிக.

## வித்று தொழுகையின் தக்பீறு.

உஸல்லி ஸலாத்தல் வித்திரி றக்அதைனி
லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்.

என்று தக்பீறுகட்டி முந்தின றக்அத்தில் சூறத்து பாத்திஹா வும், ஸப்பி ஹிஸ்ம றப்பிக வென்ற ஸூறத்தும், இரண்டாம் றக் அத்தில் பாத்திஹாவும், குல்யா ஐயுஹல் காபீரூன் என்கிற ஸூறத்தும் ஓதித் தொழுதபிறகு அவ்வல் கலிமா சொல்லிய பின்

உஸல்லி ஸுன்னதல் வித்ரி றக்அதன்
லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்.

என்று தக்பீறுகட்டி பாத்திஹாவும், குல்ஹு வல்லாஹு வும், குல் அஊது பிறப்பில் பலக்கும், குல்அஊது பிறப்பின்னு ஸும் ஓதி ஒரு றக்அத்து மட்டுந்தொழுகிறதில் இஃத்திதால் நிலை யில் றமலான் மாதம் பதினாறுமிரவு முதலாகக் குனூத்தும் அதற் குப் பின்னுள்ள துவாவுமாக ஓதித் தொழுது தீர்ந்த பிறகு (ஸுபு ஹானல் மலிக்குல் குத்தூஸ்) என்று மூன்று விடுத்தம் சொல்லு வதும், மூன்றும் விடுத்தம் சப்தத்தை உயர்த்தி சொல்வதும சுன் னத்து. இந்த வித்றுத்தொழுகையை எல்லாநாளும் இஷாத் தொழு கைக்குப் பின் தொழுகிறதும் ஸுன்னத்தாகும்.

## பெருநாள் தொழுகை.

### நோன்புபெரு நாளைக்குக் கட்டுகிற தக்பீறு.

உஸல்லி ஸலாத்த ஈதில்பித்ரி
றக் அதைனி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்.

### ஹஜ்ஜுப் பெருநாளைக்குக் கட்டுகிற தக்பீறு.

உஸல்லி ஸலாத்தல் ஈதில் அல்ஹா
றக்அதைனி லில்லாஹி தஆலா அல்லாஹு அக்பர்.

என்று தக்பீறுகட்டி முதல் றக்அத்தில் அவ்வல் தக்பீறு அல் லாமல் ஏழுவிடுத்தமும், மற்ற றக்அத்தில் ஐந்து விடுத்தமும் கை விட்டு விட்டு தக்பீறு கட்டுகிறது. ஒவ்வொரு தக்பீறு கட்டினதுக் கிடையில் ஒவ்வொரு விடுத்தமும் ஸுப்ஹானல்லா கலிமா ஓதி, கொண்டு பின் முதல் றக்அத்தில் பாத்திஹாவும், சூறத்துக் கமறும் ஓதித்தொழுகிறது: ஸப்பிஹிஸ்ம றப்பிகல் அஃலாவுல்

ஹல் அதாக வென்கிற இந்த இரண்டு சூறத்தையும் ஓதி தொழ[illegible] ஆகும்.

மற்றுமுள்ள சுன்னத்தாகிய தொழுகைகளும் அது அதற்கு ஓதலாகியமுறைகளும் எழுத்துகளாலுந் தெரிந்தவர்களாலும் படித்தறிந்துகொள்ள வேண்டும். விபரங்களுக்கு அஹ்காமுல் முஸ்லிமீன் ஷாபீ என்னும் புஸ்த்தகத்தையும் மற்றும் தொழுகைக்குரிய தொபுகளையும் வாசித்து உணர்க.

Q7:416 N46

## மையித்துக்குச் செய்யுமுறை.

மையித்துக்குச் செய்யவேண்டிய கடனாகிய பறுலுகள் 4. அதில் 1-வது பரிசுத்தமானத் தண்ணீர்கொண்டு குளிப்பாட்டுகிறது. 2-வது தூய்தாகிய புடவைகொண்டு கபனிடுகிறது. 3-வது அதற்காகத் தொழுகிறது. 4-வது நிலத்தில் குழிதோண்டி அடக்கஞ் செய்கிறது.

இந்நான்கு பறுலாகிய செயல்களுமன்றி மற்றுஞ்சடங்குகளெல்லாஞ் சுன்னத்துக்களாம.

## மையித்துத் தொழுகைக்குத் தக்பீறு கட்டுகிறது.

உஸல்லிபறுல அலாஹாதிஹில்மையிதி அறுபஅ தக்பீறுதின் லில்லாஹி அல்லாஹு அக்பர். மையித்துத் தொழுகையில் விதியாகிய பறுலுகள் 7. அதில் 1-வது நிய்யத்து வைக்கிறது. 2-வது நாலு விடுத்தம் கைவிட்டுத் தக்பீறு கட்டுகிறது. 3-வது சக்தியுள்ளவன் நின்று தொழுகிறது. 4-வது அவ்வல் தக்பீறு கட்டினவுடனே பாத்திஹா ஓதுகிறது. 5-வது இரண்டாந் தக்பீறு கட்டினவுடனே (அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்) என்று ஸலவாத்து சொல்லிக்கொண்டு, கமாஸல்லேத்தாவும், பாத்திஹாவும் ஓதுகிறது. 6-வது மூன்றாந் தக்பீறு கட்டினவுடனே (அல்லாஹும்மக்பிர்லி ஹையிநா வமய்யிதினா வஷாஹிதினா வகாயிபினா வசகீரினா வகபீரினா வசக்கரினா வஉன்தானா அல்லாஹும்ம மன் அஹ்யைதஹு மின்னா பஅஹ்யிஹி அலல்இஸ்லாமி வமன் தவப்பதஹு மின்னா பதவப்பஹு அலல் ஈமான்) நாலந் தக்பீறு கட்டினவுடனே (அல்லாஹும்ம லாதஹ்ரிம்னா அஜ்றஹு வலா தப்தின்னா பஃதஹு வக்பிர்லனா வலஹு என்று ஓதுகிறது சுன்னத்து. 7-வது ஸலாங் கொடுக்கிறதுமாகும். இந்நூலிற் போந்த வியவ்புகளெல்லாம் இன்னும் மிக்குளவாகையால் இங்ஙனஞ் சுருக்கமாக முற்றுவித்தனம்.

இன்னும் தொழுகை விஷயமாக விரிவான விபரங்களுக்கு அஹ்காமுல் முஷ்லிமீன் ஷாபீ என்ற புஸ்தகத்தைப் பார்க்க.

வஸ்ஸலாம்.

---

113726

## தொழுகையடவு ஷாபி.

### அறபு மாதங்கள்.

| | | |
|---|---|---|
| முஹர்ரம் | ஜமாதுல் அவ்வல் | றமலான் |
| ஸபர் | ஜமாதுல் ஆகிர் | ஷவ்வால் |
| றபீஉல் அவ்வல் | றஜபு | துல்காயிதா |
| றபீஉல் ஆகிர் | ஷஃபான் | துல்ஹஜ்ஜா |

ஆக மாதம் 12.

---

### கிழமைகள்.

| (அறபு) | (தமிழ்) |
|---|---|
| யௌமல் அஹ்து | ஞாயிறு |
| யௌமல் இஸ்னைன் | திங்கள் |
| யௌமல் ஸலாஸா | செவ்வாய் |
| யௌமல் அற்பஅ | புதன் |
| யௌமல் கமீஸ் | வியாழன் |
| யௌமல் ஜூம்ஆ | வெள்ளி |
| யௌமல் ஸப்தி | சனி |

ஆக நாள் 7.

---

### அறபு லக்கம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| துமுனு | அரைக்கால் | திஸ்ஆ | 9 | இஹ்தவித்தீன் | 61 |
| றுபுஉ | கால் | அஷறு | 10 | ஸப்யீன் | 70 |
| நிசுபு | அரை | இஹ்தஅஷறு | 11 | இஹ்தஸப்யீன் | 71 |
| முர்ருபுஃ | முக்கால் | இஷ்ரீன் | 20 | ஸமானீன் | 80 |
| வாஹிது | 1 | இஹ்தஇஷ்ரீன் | 21 | இஹ்தஸமானீன் | 81 |
| இஸ்னு | 2 | தலாதீன் | 30 | திஸ்யீன் | 90 |
| ஸலாஸா | 3 | இஹ்ததலாதீன் | 31 | இஹ்ததிஸ்ஈன் | 91 |
| அற்பஅ | 4 | அற்பஈன் | 40 | மிஅத்த | 100 |
| கம்சா | 5 | இஹ்தஅற்பஈன் | 41 | மிஅதைனி | 200 |
| வித்தா | 6 | கம்சீன் | 50 | அல்பு | 1000 |
| ஸப்ஆ | 7 | இஹ்தகம்சீன் | 51 | | |
| தமானியா | 8 | வித்தீன் | 60 | | |

இத்தேயங்களில் அறபு பாஷை பெரும்பான்மையும்வழங்காமையால் சிலதெடுத்து கூறலாயினன்.

தொழுகையடவு ஷாபீ முற்றிற்று.

---

Shahul Hameedia Press, Madras, P. I. C. No. MS 178, 1-6-46—3000 Copies.